DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.

CC. No. 467/2024

PW – 3

| | | |
|---|---|---|
| Name | : | முருகேசன் ( LW.8 ) |
| Father's / Husband Name | : | த/பெ.செல்வம் |
| Village | : | ராஜீவ் காந்தி நகர் |
| Taluk | : | நாமக்கல் |
| Calling | : | வீல் அலைண்ட்மெண்ட் |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 08.07.2026 தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி காணொலி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து வீல் அலைண்ட்மெண்ட் செய்யும் வேலை செய்து வருகிறேன். நான் நல்லிபாளையத்தில் உள்ள சாந்தா அலைண்ட்மெண்ட்டில் வேலை செய்து வருகிறேன். 21.01.2014 ம் தேதி காலை நேரத்தில் நல்லிபாளையம் போலிசார் நான் வேலை செய்யும் அலைண்ட்மெண்ட் அருகே வந்து முதல் நாள் இரவு எங்கள் அலைண்ட்மெண்ட் அருகில் லாரி டிரைவர் சிறுநீர்கழிக்க சென்றபோது அவரை மிரட்டி பணம் பறித்தாக கூறி விசாரித்தார்கள். பின்னர் அந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். அதில் நானும், யுவராஜ் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். **என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது. அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) நான் வேலை செய்யும் நிறுவனத்தின் உரிமையாளர் கேட்டுக்கொண்டபடி நான் மேற்படி கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரி. புகார் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் கேட்டுக்கொண்டதால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரி. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரி.

**மறு விசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையொப்பம் செய்தார்.

ஒம்/–S.தினேஷ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.